SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 41. TML1180 - வேதாத்திரியம் காட்டும் பெண்மை நோக்கு

பா மகேசுவரி
உதவிப்பேராசிரியர்
வேளாளர் மகளிர் கல்லூரி, திண்டல், ஈரோடு–12

## முன்னுரை

மனித வாழ்வின் அங்கமாக விளங்கும் பெண் அன்னையாக, மகளாக ,தாரமாக எனப் பல்வேறு உருவில் சமுதாயத்திற்கும் உலகிற்கும் பயன்படக்கூடியவளாக விளங்குபவள். சங்க காலத்தில் சுதந்திரமாக விளங்கிய பெண் இடைக்காலத்தில் அடக்கப்பட்டு உரிமைகள் மறந்து வாழக்கூடிய நிலையில் தள்ளப்பட்டவள். தற்காலமான இருபதாம் நூற்றாண்டில் விடுதலைக்குப் பின் பாடுபட்ட பெரியோர்களின் துணையால் இன்று சுதந்திரம் பெற்று வாழக்கூடிய நிலையிலும் சில உரிமைகள் மறுக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்றன .அத்தகைய உரிமைகளைப் பெண்கள் பெற வேண்டும் பெண் மகத்துவத்தை இவ்வுலகம் அறிந்து போற்ற வேண்டும் என்று வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனது ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிட்டுள்ளார் அத்தகைய பெண்ணினத்தின் பெருமையை விளக்கும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

## வேதாத்திரியம்

இந்திய நாட்டில் சென்னை மாநிலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் கூடுவாஞ்சேரி என்னும் பெயருடைய சிற்றூரில் சின்னம்மாள், வரதப்பமுதலியார் ஆகியோர்களுக்கு எட்டாவது குழந்தையாக பிறந்தவர் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலக சமுதாய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கிய ஐந்தொழுக்கப் பண்பாடும் உலக பண்பாட்டில் 14 திட்டங்களும் வேதாத்திரியம் என்று அழைக்கப்படுகின்றது.

## உயர்ந்த வாழ்க்கை நெறி

மனித குல வாழ்க்கை இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற நான்கு வகையான மன உணர்வுகளைக் கொண்டது. இந்த நான்கில் இன்பம், அமைதி பேரின்பம் என்பன வாழ்வுக்கு ஒத்தனவாகவும் பொருத்தமானதாகவும் இருக்கின்றன. துன்பம் என்ற உணர்வு வாழ்வின் இன்பங்கள் அனைத்தையும் குலைத்து விடுகின்றது. எனவே துன்பத்துக்கு உரிய செயல்களையும் சூழ்நிலைகளையும் காரணங்களையும் களைந்து கொண்டே இருப்பதுதான் தூய்மையான வாழ்வினை அனுபவிக்க ஏற்ற பொருத்தமான உயர்ந்த வாழ்க்கை நெறி. இத்தகைய உயர்ந்த வாழ்க்கை நெறியானது,

1. தனிமனித பண்பாடு
2. உலக விரிவான மனித குல பண்பாடு

என்ற இரண்டுமே அடக்கமாக பெற்றதாகும் என்று வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகின்றார்.1

## பெண்ணின் பெருமை

உலகம் என்பது பெண்களும் ஆண்களும் கூடிய ஒரு கூட்டுச் சமுதாயமே ஆகும். பெண் இல்லாமல் ஆண் இல்லை; ஆண் இல்லாமல் பெண் இல்லை; பெண்ணில்லாமல் தனியே ஒரு ஆணோ, ஆண் இல்லாமல் தனியே ஒரு பெண்ணோ வாழ்வில் இனிமை பெறவோ, முழுமை பெறவோ முடியாது. ஆகவே மனித இன வாழ்வில் ஆண் – பெண் உறவு மிகவும் மதிப்பு உடையதாக விளங்குகின்றது.

ஒரு துணியை நெய்ய வேண்டுமானால் நேரிழைகள் எனும் பாவு முதலாவதாக வேண்டும் அதேபோன்று இந்த உலகம் முழுவதும் மனித குலத்தில் நேரிழையாக இருக்கக்கூடியவர்கள் பெண்மணிகள் அவர்களை முன் வைத்து ஊடு இழைகளாக விளங்குபவர்கள் ஆண் மக்கள் இப்பெருமையை உணர்ந்தே வேதாத்திரி மகரிஷி அவர்கள்,

''பெண் வயிற்றில் உருவாகி பெண்பால் உண்டே வளர்ந்தாய்!
பெண் துணையால் வாழ்கின்றாய் பெண்ணின் பெருமை உணர்!

*என்று தன்னுடைய ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிடுகின்றார்.2*

*மேலும் அன்பு, பண்பு, பரிவு, பாசம், பொறுமை, தியாகம், விட்டுக் கொடுத்தல் போன்ற மதிப்பு மிக்க பண்புகள் ஒருசேர வாய்ப்பு பெற்றவள் பெண். அதனால் தானோ என்னவோ இறைவன் குழந்தைகளை பெற்றெடுக்கும் பெரும் பாக்கியத்தைப்பெண் இனத்திடம் ஒப்படைத்தான் போலும்.*

''எல்லையற்ற ஆற்றல் உள்ள இறைவன் திரு உள்ளம் என்ன
எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய் பெண்ணினத்தை வடிவமைத்தான் – அற்புதமே
வாழ்ந்து வரும் மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனை பேர்?''

*என்று கேட்கிறார் மகரிஷி அவர்கள்.3*

**பெண்ணின் காதல் மனம்**

*பெண்கள் இவ்வுலகில் ஆண்களைப் போல் பொருள் வருவாயைத் தேடிக்கொண்டு சம உரிமையோடு வாழ்ந்து தங்களுடைய விருப்பத்திற்கு இணங்க கணவனை தேர்ந்து கொண்டு பிரியத்தோடு வாழும் காதல் வாழ்வு எய்துதல் நன்று என்கின்றார். மேலும் பெண்களிலே பொருள் வரவு இல்லாதவர்கள் பெற்றோர்கள் விருப்பம் போல் மணத்தல் நன்று என்றும் அப்படிப்பட்ட பெண்ணினத்தை ஆண் வெறுத்தால் அவர்களுடைய வாழ்வு ஏது .அவர்கள் எங்கு செல்வார்கள் என்று ஆண் இனத்தை பார்த்து பெண்களைப் போற்ற வேண்டும் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். இதனை,*

''பெண்கள் தம் பொருள் வருவாய் ஆண்களைப் போல்
பெற்று சம உரிமை உடன் வாழும் காலம்
பெண்கள் தம் விருப்பம் போல் கணவன் தேர்ந்து
பிரியமுடன் காதல் வாழ்வு எய்தல் நன்று
பெண்களிலே பொருள் வரவு அற்றோர் தங்கள்
பெற்றோர்கள் விருப்பம் போல் மணத்தல் நன்று
பெண் இதனை மறந்தாற்ற ஆண் வெறுத்தால்
பேதைக்கு வாழ்வேது? எங்கு செல்வாள்?

*என்று தனது ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிடுகின்றார்.4*

**பெண் உரிமை**

*இவ்வுலகில் ஒரு பெண் ஆண்களைப் போலவே தானும் தொழில் செய்து பொருளீட்டி உண்டு உடுத்து தனது கடமையை செய்ய உரிமை வேண்டுமென்றும் இனி ஒரு பெண் ஒரு ஆடவனுக்காக தன் உடலினையே அர்ப்பணித்து உணவு உடை வாடகை போல் பெற்று உலாவும் ஒரு இழிந்த அடிமை நிலையை உலகினில் பெண் இனத்திற்கு இனிமேல் இருக்கக் கூடாது என்றும் சாடுகின்றார். இதனை,*

''ஒரு பெண் தன் உடலினையே அர்ப்பணித்து
உணவு உடை வாடகைப் போல் பெற்று உலாவும்
ஒரு இழிந்த அடிமை நிலை பெண் இனத்திற்கு
உலகினிலே இனி வேண்டாம் ஒவ்வொரு பெண்ணும்
ஒரு தொழிலைச்செய்து பொருளீட்டிக் காத்து
உண்டு உடுத்து கடமை செய்யும் உரிமை வேண்டும்''

*என்று தனது ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிடுகின்றார்.5*

**கற்பின் கடமை**

*இவ்வுலகம் கற்பு என்பதை பெண்களுக்கு மட்டுமே என்று பட்டயம் தீட்டிக் கொண்டிருக்கிறது. அக் கற்புக்கு மதிப்பளிக்க இவ்வுலகில் ஆண் பெண் இருபாலருக்கும் கடமை உண்டு என்றும் கற்பை தவறவிட்ட பெண்ணுக்கு இவ்வுலகம் ஆணை விட்டுவிட்டு பெண்ணுக்கே சின்னம் வைக்கும் என்றும் அவ்வாண்மகன் சற்புத்திரன் போல் இவ்வுலகில் திரிகிறான் என்றும் ஆகையால் பெண்கள் கற்பை உயிரினும் மேலானதாகக் கருதுகின்றனர் என்றும் தனது ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிடுகின்றார். இதனை,*

''கற்புக்கு மதிப்பளிக்க இருபாலருக்கும்
கடமை பொதுவாக எனினும் தவறிவிட்டால்
அற்புதமாம் இயற்கை அதன் ஆட்சி வேகம்

ஆணை விட்டு பெண்ணுக்கு சின்னம் வைக்கும்
சற்புத்திரன் போல் அவன் உலாவ சமூகத்தால் அவள் தூற்றப்படுவாள்
அதனால் நற்பண்பாம் கற்பொழுங்கை உயிரின் மேலாய்
நாடுகின்றார் அறிவில் உயர் பெண்கள் எல்லாம்''

*என்ற பாடலால் அறியலாம்.6*

**விதவைகள் மணம்**

*பாரதியாரைப் போல் பாரதிதாசனை போல் வேதாத்திரி மகரிஷி அவர்களும் விதவைகள் மறுமணத்தை ஆதரிக்கின்றார் .ஒரு ஆண் தன்மனைவி இறந்தால் மீண்டும் மறுமணம் செய்து கொள்கின்றான். ஆனால் பெண்ணானவள் மறுமணம் செய்து கொண்டால் இந்த உலகம் அவளை வீண் பழி சுமத்துகின்றது. ஒரு ஆண் செய்யக்கூடிய பலதார மணத்தையும் கண்டிக்கின்றார். இதனை,*

''ஆண்களோ பெண்டிழந்தால் அவர் மறுமணமே கொள்வார்
வீண்பழி சொல்வார் இந்த விதமதைப் பெண்கள் செய்தால்
மாண்புள மனிதர் செய்த மத நூல்கள் பலதும் ஒப்பும்
ஊண் உடை வசதி தந்து ஒருவரே பல பெண் கொள்ள''

*என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.7*

**பெண்ணின் துறவு**

*ஒரு பெண் திருமணமான பிறகு கணவன் வீட்டுக்கு வருகின்ற போது பெற்றோர்களைத் துறந்து வீட்டைத் துறந்து, பிறந்த ஊரைத் துறந்து, பெற்றோர்கள் வீட்டில் இருக்கக்கூடிய எல்லா பொருட்களையும் துறந்து கணவன் வீட்டிற்கு வருகிறாள். இநத்தகைய துறவை விட இதுவரை எந்த இடத்தில் யார் மேற்கொண்ட துறவு அதிகமாக இருந்துவிட முடியும் . அத்தகைய துறவிகளையே ஆண்கள் மனைவிகளாக பெற்றிருக்கின்றார்கள். கணவருடைய நலத்திற்காகவே அவர்களுடைய வாழ்நாளெல்லாம் ஒத்துழைக்கத் தயாராக வந்து விட்டார்கள். அதை உணர்ந்து கொள்ள வேண்டியது ஆண்கள் உடைய கடமை என்று வேதாத்திரி மகரிஷி அவர்கள் உணர்த்தி பெண்மைக்கு பெரிதும் பெருமை செய்யும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30ஆம் தேதி மனவளக்கலை மன்றங்களில் மனைவி நல வேட்பு நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் ஆண்கள் பெண்ணின் பெருமையை உணர்ந்து கொள்வதற்கும் அவர்களுக்கு பாதுகாப்பும் பராமரிப்பும் அளிக்க உறுதி ஏற்கும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. இதனை,*

''பெற்றோரை திறந்தகத்தை பிறந்த ஊரை விட்டுப்
பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்ற
பற்றற்றத்துறவியெனக் குடும்பத்தொண்டு ஏற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க்கொண்டு என்
நற்றவத்தால் என் வாழ்க்கை துணையாகிப் பெண்மை
நலன் நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்''8

*என்று ஒவ்வொரு ஆடவனும் கூற வேண்டுமென்று தனது ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.*

**முடிவுரை**

*அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ மனதாலோ தன்னோடு இணைத்து பிடித்துக் கொண்டிருப்பது அப்படி இணைத்துள்ள மற்றொன்றுக்கு தனது ஆற்றலை தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை. அவ்வடிப்படையில் ஒரு பெண்ணானவள் அன்பும் கருணையுமாக இவ்வுலகத்தில் உலவி தனது கடமையை ஆற்றிக் கொண்டிருக்கக் கூடிய பெண்மையை போற்றுவோம் என்றும் அவளது உரிமையையும் கடமையையும் பாதுகாக்க வேண்டும் என்றும் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறிய கருத்துக்களை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**அடிக்குறிப்புக்கள்**

1. வேதாத்ரியம், தத்துவஞானி வேதாத்ரி மகரிஷி, பக்.8.
2. ஞானக்களஞ்சியம் பா.543.
3. அருள்தந்தை வேதாத்ரி மகரிஷி, பன்முக ஆய்வு, முனைவர் இரா.சந்திரசேகரன், பக்.102.
4. ஞானக்களஞ்சியம் பா.542

5. ஞானக்களஞ்சியம் பா.545
6. அருள்தந்தை வேதாத்ரி மகரிஷி, பன்முக ஆய்வு, முனைவர் இரா.சந்திரசேகரன், பக்.264
7. ஞானக்களஞ்சியம் பா.547
8. ஞானக்களஞ்சியம் பா.704

**துணைநூற்பட்டியல்**


1. முனைவர் இரா. சந்திரசேகரன், 2005, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி பன்முக ஆய்வு, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
2. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி (பகுதி–1), 2022, ஞானகளஞ்சியம், உலக சமுதாய சேவா சங்கம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
3. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, 2016, வேதாத்ரியம், உலக சமுதாய சேவா சங்கம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, 2004, எனது வாழ்க்கை விளக்கம், வேதாத்ரி பதிப்பகம், 156, காந்திஜி சாலை, ஈரோடு.
5. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, 2004, ஞானமும் வாழ்வும், வேதாத்ரி பதிப்பகம், 156, காந்திஜி சாலை, ஈரோடு.
6. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, 2002, சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், வேதாத்ரி பதிப்பகம், 156, காந்திஜி சாலை, ஈரோடு.